<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| R.L.T.O.P.No. | 1/2023 | சாட்சி | ம.சா.1 |
| பெயர் | ராமசாமி | நாள் | 31.01.2025 |
| தகப்பனார் பெயர் | கந்தகவுண்டர் | | |

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை :-</u>**

1) என்ன பரிகாரம் கோரி இம்மனுவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், எதிர்மனுதாரரிடம் வாடகையை உயர்த்தி தர கோரியும், உரிய காலத்திற்குள் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தி தரக்கோரியும் தாக்கல் செய்துள்ளேன். யார் யாரை இம்மனுவில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால், நங்கவள்ளி கூட்டுறவு கடன் சங்கத்தின் தனி அலுவலர், ஓமலூர் கூட்டுறவு சங்க துணை பதிவாளர், சேலம் கூட்டுறவு சங்க இணை பதிவாளர் ஆகியோரை இம்மனுவில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன்.

2) நான் என்ன படித்துள்ளேன் என்றால், 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன பணி செய்கிறேன் என்றால், நங்கவள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். மனு சொத்தின் நீள, அகலம் என்னவென்றால், மொத்தம் 5-1/2 சென்ட் ஆகும். அதில் 22 அடி அகலம் மற்றும் 28 அடி நீளத்தில் தார்சு கட்டிடம் கட்டியுள்ளேன். மேற்படி கட்டிடமும், காலி நிலமும் 1ம் எதிர்மனுதாரர் அனுபவத்தில் உள்ளது.

3) மேற்படி கட்டிடம் தற்போது என்ன பயன்பாட்டில் உள்ளது என்றால், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சேவை மையமாக இயங்கி வருகிறது. என்ன சேவை வழங்கப்படுகிறது என்றால், நகை கடன் மற்றும் பண வைப்பீடு செய்தல், வழங்குதல் போன்ற சேவைகள் வழங்கப்படுகிறது. நான் என்ன பணியில் சேர்ந்தேன் என்றல், விற்பனையாளராக பணியில் சேர்ந்தேன். என்ன பதவியில் ஓய்வு பெற்றேன் என்றால், துணை செயலாளராக ஓய்வு பெற்றேன்.

4) கூட்டுறவு கடன் சங்கத்தின் சட்ட திட்டங்கள் எனக்கு தெரியும் என்றால், சரிதான். மேற்படி கூட்டுறவு கடன் சங்கத்தில் எந்த காலகட்டத்தில் நிர்வாக குழு இருந்தது என்றால், 09.05.2013 முதல் 08.03.2017 வரை மேற்படி நிர்வாக குழுவில் தலைவராக P.சண்முகம் என்பவரும், 9 பேர் நிர்வாக குழு உறுப்பினர்களாகவும் இருந்தார்கள் என்றால், சரிதான். ஒரு நிர்வாக குழுவிற்கு எத்தனை ஆண்டுகள் பதவி காலம் என்றால், 5 ஆண்டுகள் ஆகும். மேற்படி நிர்வாக குழுவில் C.செல்வராஜ் என்பவர் செயலாளராக இருந்தார் என்றால், சரிதான்.

5) மேற்படி நிர்வாக குழு 5 ஆண்டுகள் முடியும் முன்னரே தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மோசடி மற்றும் கையாடல் செய்யப்பட்ட காரணத்தினால் கலைக்கப்பட்டு அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவர் மீதும் விசாரணை நிலுவையிலுள்ளது என்றால், சரிதான். அவ்வாறு மேற்படி நிர்வாக குழு கலைக்கப்பட்ட பின்னர் கடந்த 09.03.2017 ம் தேதியிலிருந்து தற்போது வரை தனி அலுவலர் தான் மேற்படி சங்கத்தை நிர்வாகம் செய்து வருகிறார் என்றால், சரிதான்.

6) நான் என் சொத்தை வாடகைக்கு விட்ட சமயத்தில் நிர்வாக குழு தான் நடைமுறையில் இருந்தது என்றால், சரிதான். பின்னர் தனி அலுவலரின் செயல்பாட்டிற்கு சங்கம் வந்தது.

(எதிர்மனுதாரர் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.